**இந்தப் பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணமானது, மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ (ஆடீளுடு) ஊடாக வழங்கப்படுகின்ற நிலையான வைப்பு உற்பத்தி மற்றும் சேவைகளது பிரதான அம்சங்களைக் கொண்டுள்ளது.**

| உற்பத்தி / சேவைகள் | தேவையான ஆவணங்கள் | தகைமைகள் | பிரதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் |
|---|---|---|---|
| **நிலையான வைப்பு** | **தனிநபர் / கூட்டு / மூத்த குடிமகன்**<br>• சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட MBSL நிலையான வைப்பு விண்ணப்பப்படிவம் (கட்டளை)<br>• தேசிய அடையாள அட்டை இல்லாத சந்தர்ப்பத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ளடக்கப்பட்ட செல்லுபடியான கடவுச் சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்<br>• குறிப்பிட்ட முகவரியானது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியை விட மாறுபட்டதாக இருந்தால், முகவரியை உறுதிப்படுத்தும் சாட்சி ஆவணங்கள் (3 மாதத்திற்குள் வழங்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்)<br>• உங்களது வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும்” (KYC) தேவைப்பாடு | • 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் / இந்த நாட்டில் வசிப்பவர்கள் / இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் | • அனைத்து சாத்தியமான வாடிக்கையாளர்களும் பிரதான அலுவலகத்திற்கு அல்லது அண்மையிலுள்ள கிளைக்கு வருகை தந்து தமது தேவைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அழைக்கப்படுகின்றார்கள். அந்தக் கலந்துரையாடலின் பின்னர் வாடிக்கையாளரது தேவைப்பாட்டின் அடிப்படையில் கம்பனியினால் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு உரிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.<br>• சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் சிரேஷ்ட அல்லாத பிரஜைகளுக்குக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம் வழங்கப்படும். வட்டியானது மாதாந்தம் அல்லது காலம் பூர்த்தியாகும்போது கொடுப்பனவு செய்யப்படும்.<br>• ஏற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்கு வட்டி வீதம் நிலையாகக் காணப்படும்.<br>• 01 தொடக்கம் 60 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு வைப்புகளை வைப்புச் செய்யலாம்.<br>• ஆகக்குறைந்த அடிப்படை வைப்புத் தொகை:<br>  ● முதிர்வு – நாளாந்த வட்டி ரூ. 5,000.00<br>  ● முதிர்வு – மாதாந்த வட்டி ரூ. 10,000.00<br>• சிரேஷ்ட பிரஜைகள் கூட்டுக் கணக்கிற்கான சிரேஷ்ட பிரஜைகள் வட்டி வீதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, கணக்கு வைத்திருக்கும் அனைவரும் சிரேஷ்ட |
| | **கம்பனி / பங்குடமை / தனிநபர் வியாபாரம் / கழகங்கள் மற்றும் சங்கங்கள் / நம்பிக்கை நிதியம்**<br>• சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட MBSL நிலையான வைப்பு விண்ணப்பப்படிவம் (கட்டளை) | • வியாபாரப் பெயர் கட்டளைச்சட்டத்தின் கீழ் இலங்கையில் சரியாகப் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மற்றும் ஏனைய வர்த்தக நிறுவனங்கள் / | |

**இந்த ஆவணமானது, இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2023ஆம் ஆண்டு 01ஆம் இலக்க நிதி வாடிக்கையார் பாதுகாப்பு பிரமாணங்களின் தேவைப்பாடுகளுக்கு ஏற்புடைய விதத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.**

| | | | |
|---|---|---|---|
| | - வியாபாரப் பதிவுச் சான்றிதழ் / நிறுவனம் தாபிக்கப்பட்ட சான்றிதழ்<br>- சங்கத்தின் யாப்பு<br>- பணிப்பாளர் சபை பிரேரணை<br>- சான்றுப்படுத்தப்பட்ட பணிப்பாளர்களது பெயர்ப்பட்டியல் (படிவம் 1) மற்றும் பணிப்பாளர்களது ஏதேனும் மாற்றங்கள் (படிவம் 2..0)<br>- நடைமுறையிலுள்ள கம்பனியொன்றாக மீளப் பதிவு செய்யப்பட்டிருப்பின் (படிவம் 40)<br>- சங்கத்தின் / கழகத்தின் அல்லது அமைப்பின் யாப்பு மற்றும் கூட்ட அறிக்கை<br>- அதிகாரம்பெற்ற கையொப்பதாரர்கள் அனுமதிப்பதற்கான சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்கள்<br>- அதிகாரம்பெற்ற கையொப்பதாரர்களது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்<br>- முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் (கம்பனி பெயரில் உள்ள சிட்டைகள் அல்லது வங்கிக் கணக்கு அறிக்கை)<br>  - நிறுவன வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும் (KYC) தேவைப்பாடு<br>  - பயனர் உரிமை (UBO) தொடர்பான கூற்று<br>  - கையொப்பதாரர்களது வாடிக்கையாளர் அடையாள (KYC) தகவல் கையொப்ப அட்டை. | அமைப்புக்கள் | பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.<br>- மாதாந்த வட்டி கொடுப்பனவின்போது வட்டியானது, இணங்கப்பட்ட வருடாந்த வட்டி வீதத்தை வருடத்திலுள்ள தினங்களால் (365) பிரித்து, அதனை உரிய மாதத்திலுள்ள தினங்களால் பெருக்குதலாகும்.<br>- இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு அலகினால் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய கம்பனி கோருகின்ற தகவல்களை வாடிக்கையாளர் கொடுக்கவில்லையெனின், எந்தவொரு வைப்பினையும் நிராகரிப்பதற்கு MBSl நிறுவனத்திற்கு உரிமை உண்டு.<br>- முதிர்வின்போது வட்டி கொடுப்பனவு செய்யப்படுகின்ற வைப்பிற்காக அதன் பெறுமதியில் ஆகக்கூடியது 80%வரையும், மாதாந்தம் வட்டி கொடுப்பனவு செய்யப்படுகின்ற ஆகக்கூடியது 75% வரையும் உடனடி கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். (மாதாந்த வைப்புக் காலப்பகுதியின் அடிப்படையில் எடுக்கக்கூடிய ஆகக்கூடிய கடன் தொகை மாறுபடலாம்)<br>- வைப்புக் காப்புறுதி கொள்கையானது வைப்புச் செய்யப்பட்டுள்ள நிதியின் அடிப்படையில், ஒரு வைப்பாளருக்கு ஆகக்கூடியது ரூ.1,100,000.00 எல்லை வரை உரித்தாகும்.<br>- இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தலின் பிரகாரம், காலம் கடப்பதற்கு முன்னர் பெறப்படும் வைப்புக்களுக்கு குறைந்த வட்டி வீதம் செல்லுபடியாகும். (ஒரு மாதத்திற்குக் குறைந்த காலப்பகுதிக்கு வட்டி கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.)<br>- நிலையான வைப்பொன்றை ஆரம்பித்தல் மற்றும் பேணிச்செல்லுவதற்கு எந்தவொரு கட்டணமும் |

| | | | |
|---|---|---|---|
| | | | அறவிடப்படமாட்டாது.<br>• வரி அல்லது கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கங்களுக்காக கட்டணங்கள் அறிவிடப்படமாட்டாது. வீசா (Visa) நடவடிக்கைகளுக்காக தூதரங்களுக்கு கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் மற்றும் கணக்குக் கூற்றுக்களை வழங்குவதற்காக ரூ.1,000.00 சேவைக்கட்டணமாக அறவிடப்படும்.<br>• நிலையான வைப்பினை பிணையாக வைத்து பெறப்படுகின்ற கடன்களுக்கான வட்டி வீதமானது, வைப்பிற்கு இணங்கப்பட்ட வட்டி வீதத்தினை விட 3.50% அதிகரிப்பதுடன், அதற்காக ரூ.1,000.00 சேவைக்கட்டணம் அறவிடப்படும்.<br>• உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கட்டளையின் பிரகாரம் தடுத்து வைத்தல் வரி (WHT) நடைமுறைப்படுத்தப்படும்.<br>• நிலையான வைப்புச் சான்றிதழ் காணாமற்போனால் அல்லது சிதைவடைந்தால், அதன் இரண்டாவது பிரதியைப் பெற்றுக்கொள்வதற்காக சத்தியப் பிரமாணப்பத்திரத்தையும், MBSL நிறுவனத்தின் நட்டஈட்டை வழங்கும் ஒப்பந்தப் படிவத்தினையும் சமர்ப்பித்தல் வேண்டும். (Indemnity).<br>• புதுப்பிப்பு அறிவிப்புக்கள் வாடிக்கையாளருக்கு அனுப்பப்படும்.<br>• நியமன வசதி தேவையானால் வழங்கப்படும்.<br>• முதிர்வடைந்த வைப்பானது, ஆரம்ப நிலையான வைப்புச் சான்றிதழுடன் முதிர்ச்சிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய மூடப்படும்.<br>• வைப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியானது நிலையானதாகக் காணப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | | | என்பதுடன் அதனை உரிய காலப்பகுதிக்கு முன்னர் மூடிவிட முடியாது. ஏவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியின் (CBSL) அறிவுறுத்தல்களுக்கமைய பொதுவான சேமிப்பு வட்டி வீதத்தை விட 2.00% அதிக வீதத்தை குறைக்கும் அடிப்படையில் முகாமைத்துவதத்தின் விருப்பின் பேரில் காலம் முடிவடைவதற்கு முன்னர் பெற்றுக் கொள்வது கருத்திற் கொள்ளப்படும்.<br>- கூட்டுக் கணக்கிலுள்ள வைப்புகளை உரிய காலத்திற்கு முன்னர் பெற்றுக் கொள்வதாயின் அனைத்துத் தரப்பினரதும் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.<br>- நிலையான வைப்பொன்றை முதிர்வடைவதற்கு முன்னர் மூடிவிடும்போது வழங்கப்படும் வட்டி வீதமானது வைப்புக் காலம் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களுக்கமைய தீர்மானிக்கப்படும். மாதாந்தம் வட்டி பெறப்பட்டிருந்தால், மேலதிகமாகப் பெறப்பட்ட வட்டியானது மூலதனத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படும்.<br>- வைப்புச் செய்தவரால் பணம் மீளப் பெறப்படுவது தொடர்பில் எந்தவொரு அறிவுறுத்தலும் வழங்கப்பட்டிருக்காவிட்டால், நடைமுறையிலுள்ள வட்டி வீதத்தின் கீழ் மீள தன்னிச்சையாகப் புதுப்பிக்கப்படும். |

## இலங்கை மேர்சன்ட் பேங்க் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள்

- MBSL நிறுவனத்தின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர்கள் தமக்கு அருகிலுள்ள கிளைக்குச் செல்ல முடியும் அல்லது தொடர்பு கொள்ள முடியும். கிளை அமைந்துள்ள இடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் எமது www.mbslbank.com இணையத்தளத்தில் காட்டப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த நிலையான வைப்பு

- ஒருங்கிணைந்த வைப்பின்போது ஒரு வைப்பாளர் இறக்கும் சந்தர்ப்பத்தில், அது தொடர்பாக உடனடியாக MBSL நிறுவனத்திற்கு அறிவிக்க வேண்டியதுடன், அந்த வைப்புத் தொடர்பில் ஆர்வம் அல்லது உரிமையுள்ள ஒரே நபராக MBSL நிறுவனத்தினால் கருதப்படுபவர் உயிரோடு இருக்கின்ற மற்றைய வைப்பாளர் (Survivor) மட்டுமே.

## வட்டி வீதம்

- ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற வழிகாட்டல்களுக்கமைய, வட்டி வீதமானது MBSL நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும்.
- சந்தை நிலைமைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் வழிகாட்டல்களின் அடிப்படையில் காலத்திற்குக் காலம் வட்டி வீதம் திருத்தியமைக்கப்படும்.
- வைப்பு சேவைகளுக்கான நடப்பு வட்டி வீதமானது எமது அனைத்து கிளைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் www.mbslbank.com என்ற இணையத்தளத்திலும் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## மரணித்த வாடிக்கையாளரது நிதியை பெயரிடப்பட்ட நபர் / சட்டரீதியான வாரிசுக்கு விடுவித்தல்.

- மரணித்த வாடிக்கையாளரது கணக்கு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட சட்டரீதியான நடைமுறைகள் பின்பற்றப்படும். (பெயரிடப்பட்ட நபர் / பயனாளிகள் / சட்டரீதியான வாரிசுகள்
- அதற்கான உரிமையைப் பெறுவர்கள்) அதற்குத் தேவையான ஆவணங்கள்
  - நிலையான வைப்பு : நிலையான வைப்பு மூலச் சான்றிதழ் / மூல இறப்பு சான்றிதழ் / பெயரிடப்பட்ட நபரிடமிருந்து கிடைத்த கோரிக்கைக் கடிதம் / பெயரிடப்பட்ட நபரது தேசிய அடையாள அட்டை / பெயரிடப்பட்ட நபர் சமர்ப்பிக்கும் சத்தியக்கடதாசி / பெயரிடப்பட்ட நபரின் KYC (வாடிக்கையாளரை அடையாளங்காணும்) கூற்று.

## உற்பத்தி மற்றும் சேவைகள் தொடர்பில் வலுவிலுள்ள சட்டரீதியான ஏற்பாடுகள்

- 2011 ஆம் ஆண்டு 42ஆம் இலக்க நிதி வியாபாரச் சட்டம்
- 2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம்
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகள்
- குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை மற்றும் இலங்கையில் செயலிலுள்ள ஏனைய சட்டங்கள்.

## செயலிழந்த கணக்குகள் / கைவிடப்பட்ட சொத்துக்கள்

- கைவிடப்பட்ட கணக்கு தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வழங்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட சட்டரீதியான நடைமுறைகள் பின்பற்றப்படும். 2011ஆம் ஆண்டு 42ஆம் இலக்க நிதி வர்த்தக சட்டத்திற்கமைய, ஆகக்கூடியது 10 வருடங்களுக்கு எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களோ அல்லது பரிவர்த்தனைளோ மேற்கொள்ளப்படாத வைப்புக்கள், செயலிழந்த வைப்புக்களாக அடையாளப்படுத்தப்பட்டு பின்னர் இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்படும்.

## வெளிப்படுத்துகை

- 2011 ஆம் ஆண்டு 42ஆம் இலக்க நிதி வர்த்தக சட்டத்தின் 61(2) பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, வாடிக்கையாளருடன் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் MBSL நிறுவனமானது மிகுந்த இரகசியத்தன்மையைப் பேணும்.

- MBSL நிறுவனமானது இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுவதுடன், வாடிக்கையாளருக்கு முன்னறிவித்தலின்றி மற்றும் வாடிக்கைளாருக்கு எந்தவித பொறுப்பும் அல்லது சட்டரீதியான செயற்பாடுகளும் இன்றி, வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கல்களது விபரங்களை இலங்கை மத்திய வங்கிக்கும் ஏனைய ஒழுங்குபடுத்தல் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு கடப்பாடுடையது.

## 2006 ஆம் ஆண்டு 06ஆம் இலக்க நிதிக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம்

- ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு எடுக்கும் முயற்சியானது, ஏதேனும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு அல்லது குற்றவியல் குற்றத்துடன் தொடர்புள்ளது என சந்தேகப்படுவதற்கு MBSL நிறுவனத்திற்கு நியாயமான காரணங்கள் இருப்பின், 2006ஆம் ஆண்டு 06ஆம் இலக்க நிதிக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் 7ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஆடீளுடு இனால் அந்தக் கொடுக்கல்வாங்கல்கள் நிதிப் புலனாய்வு அலகிற்கு அறிக்கை

செய்யப்படும்.

- அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள விதத்தில், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் உரிய எல்லை மீறப்பட்ட (1 மில்லியன் ரூபாய்களுக்கு மேற்பட்ட) கொடுக்கல்வாங்கல்கள், இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வு அலகிற்கு அறிக்கை செய்யப்படும்.

## வாடிக்கையாளர்களது முறைப்பாடுகளைத் தீர்க்கும் நடைமுறைகள்

- வாடிக்கையாளர்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ள எந்தவொரு முறையின் ஊடாகவும் மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா (MBSL) இற்கு முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும்.
    - அனைத்து கிளைகளிலும் உள்ள முகாமையாளர் அல்லது இரண்டாவது உத்தியோகத்தரை அழைப்பை ஏற்படுத்துதல் அல்லது எழுத்துமூலமான முறைப்பாடுகளை முன்வைத்தல்.
    - எமது உடனடி அழைப்பு இலக்கத்திற்கு 0114 711 711 அழைத்தல்.
    - வாடிக்கையாளர் சேவைப் பிரிவிற்கு மின்னஞ்சலொன்றை அனுப்புதல். customercare@mbslbank.com
    - MBSL இன் முறைப்பாடுகளைக் கையாளும் உத்தியோகத்தரை தொடர்புகொள்ளுதல் அல்லது அவருக்கு எழுத்துமூலம் அறிவித்தல். **(திரு. ருவன் பியதாச (பதிற்கடமை), 14 ஆம் மாடி, இலங்கை வங்கி மேர்சன்ட் கோபுரம், இலக்கம் 28, புனித மைக்கேல் வீதி, கொழும்பு 03. கையடக்கத் தொலைபேசி இலக்கம்: 077-3219578).**
- மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து வெளியிடப்பட்டுள்ள முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகளை பார்க்கவும்.
- திருப்திகரமான தீர்வொன்று வழங்கப்படாத சந்தர்ப்பத்தில், வாடிக்கையாளருக்கு தமது முறைப்பாடுகளை இலங்கை நிதி ஒம்புட்ஸ்மன் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கலாம்.

**நிதி ஒம்புட்ஸ்மன், நிதி ஒம்புட்ஸ்மன் அலுவலகம், இலக்கம் 143A வஜிர வீதி, கொழும்பு 05.**

**தொலைபேசி இலக்கம் : ₊94 11 259 5624** | தொலைநகல் **(Telefax): +94 11 259 5625** | மின்னஞ்சல் : **fosril@sltnet.lk** | **இணையத்தளம் : www.financialombudsman.lk**